**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 26.03.2024**

| | |
|---|---|
| **Name : ஜெயலட்சுமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். மருத்துவமனையில் எனது கணவரை எப்போது பார்த்தேன் என்றால் காலை 09.30 மணிக்கு பார்த்தேன். காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 12.02.2023 ம் தேதியன்று காலை 09.00 மணிக்கு கொடுத்தேன். முதல் விசாரணையில் சம்பவ தேதி சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

2. எனது கணவர், மகன், மருமகன் முன்று பேரும் இரு சக்கர வாகனத்தல் செல்வது தவறு என்றால் தவறில்லை. இருசக்கர வாகனம் யார் ஒட்டினார்கள் என்றால் எனது கணவர் ஒட்டினார். எனது கணவர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் ஆமாம். தலைகவசம் அணிந்திருந்ததாக எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு ஒட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது, அது விபத்து சமயத்தல் தொலைந்து விட்டது.

3. புகாரில் என்ன காரணத்திற்கு மேச்சேரி சென்றார்கள் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். புகாரில் கறி வாங்குவதற்கு தான் மேச்சேரி சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் மருத்துவமனைக்கு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். புகார் யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதினார்கள்.

4. புகாரில் உள்ள விபரம் எனக்கு படித்து காண்பிக்க வில்லை என்றால் சரிதான்.

புகாரில் எந்தவாகனத்தின் ஆஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனகுறைவால் நடந்தது என்பதனை விசாரிக்காமல் நான் இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 26.03.2024**

| Name : அஜீத்குமார் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எனது மாமா செல்வராஜ் ஓட்டிய வாகனம் யாருடையது என்றால் என்னுடையது ஆகும். ஆனால் என் பெயரில் பதிவு புத்தகம் இல்லை என்றால் சரிதான். வீட்டிலிருந்து செல்லும் போது யார் இருசக்கர வாகனத்தை ஓட்டினார்கள் என்றால் எனது மாமனார் தான் ஓட்டினார். சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் கடந்த 2 வது மாதம் 2023 ம் வருடம் நடந்தது.

2. எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் காலை 9 யிலிருந்து 10 மணிக்குள் நடந்தது. எதற்காக மேச்சேரி சென்றோம் என்றால் எனது மைத்துனருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் சென்றோம். போலிசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 12.02.2020 ம் தேதியன்று சம்பவம் நடந்தன்று விசாரணை செய்தார்கள்.

3. போலிசார் விசாரணையின் போது நான் மருத்துவமனைக்கு சென்ற போது விபத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இரு சக்கர வாகனத்தில் எத்தனை பேர் சென்றோம் என்றால் முன்று பேர் சென்றோம். உடல் நிலை சரியில்லாததால் சென்றோம். எனது மாமனார் தலை கவசம் அணியவில்லை என்றால் இல்லை. அணிந்திருந்தார்கள். தலைகவசம் அணிந்திருந்தரா என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் கேட்கவில்லை அதனால் நான் சொல்லிவில்லை. விபத்து பற்றி மட்டுமே கேட்டார்கள்.

4. எனது மாமனருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் ஒட்டுனர் வைத்திருந்தார். இரு சக்கரவாகனத்தில் முன்று பேர் பயணம் செய்வது தவறு என்றால் அன்றைய தினம் சூழ்நிலை காரணமாக பயணம் செய்தோம். எனது மைத்துனர் அவர்களை மருத்தவமனைக்கு அழைத்து சென்றது சம்பந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் கேட்கவில்லை, அதே சமயம் நான் அடிபட்டதால் மருத்துவமனைக்கு சென்று விட்டேன்.

5. போலிசார் விசாரணையில் எந்த கனரக வாகன ஒட்டுனரின் கவனகுறைவால் விபத்து நடந்தது என்ற விபரத்தை சொல்லிவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தின் போது என் கண்முன்பாக எனது மாமனாரின் தலை மீது டயர் ஏறி இறங்கி விபத்து நடந்தது என்பதனை சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் முதல்விசாரணையில் ஒட்டுனரை பார்த்த பின்னர் மயக்கமடைந்து விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் அடிபட்டவுடன் மயக்கமடைந்துவிட்டேன் என்றும், உடனடியாக மருத்துவமனைக்கு சென்ற பின்னர் மறுநாள் தான் எனக்கு மயக்கம் தெளிந்தது என்றால் இல்லை. ஒட்டுனரை நான் பார்த்த பின்னர் தான் மயக்கம் ஏற்பட்டது.

6. எனது மாமனார், மகன் இருவரும் எந்த பக்கம் விழுந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் எனது மாமனார் மற்றும் மைத்துனர் ஒருபுறமாகவும், எனது மைத்துனார் எனது மாமனார் மீது விழுந்து விட்டார். நான் இடது பக்கமாக விழுந்து விட்டார். எனது மாமனார் மற்றும் மைத்தனர் இருவரும் ரோட்டின் எந்த பக்கம் விழுந்ததால் விபத்து ஏற்பட்டதாகசொல்லியுள்ளேன் என்றால் நேராக விழுந்ததால் விபத்து எற்பட்டதாக சொல்லியுள்ளேன். நான் இடது பக்கம் விழுந்த போது விபத்து நடந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

7. நான் சொல்வது போல் விபத்து நடக்கவில்லை என்றும், இறந்தவர் எனது மாமனார் என்பதால் இழப்பீடு பெற வேண்டி நான் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258–2023**

**Prosecution witness : அ.சா.3** **Date : 26.03.2024**

| | |
|---|---|
| **Name : சகாதேவன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் திமிரிகோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது தாய்மாமன் மகன் மற்றும் பேரன் இருவரும் இறந்துபோய்விட்டர்கள். கடந்த 12.02.2023ம் தேதியன்று காலை 9 மணிக்கு இரு சக்கர வாகனத்தில் செல்வராஜ், பழனியப்பன், மற்றும் அ.சா2 ஆகியோர் சென்ற போது லாரி வடக்கு போகும் போது இடித்தாக சொன்னார்கள். விபத்தின் காரணமாக செல்வராஜ், பழனியப்பன் இருவரும் இறந்து போய்விட்டார்கள். அ.சா2 என்பவருக்கு காயம் ஏற்பட்டது. ஒமலூர் மருத்துவமனையில் வைத்து பிரேத பரிசோதனை செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2). சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 12ம் தேதியில் மேச்சேரி காவல் நிலையத்தல் வைத்து விசாரணை செய்தார்கள். பிரேத பரிசோதனையில் போது நான் இல்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258-2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 26.03.2024**

| | |
|---|---|
| **Name : தங்கவேல்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஒத்தபுளியன்குளத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது பக்கத்து வீட்டை சேர்ந்த செல்வம் மற்றும் அவரது மகன் இருவரும் இறந்துபோய்விட்டர்கள். கடந்த 12.02.2023ம் தேதியன்று காலை 8.50 மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள். பிறகு ஒமலூர் மருத்துவமனையில் வைத்து பிரேத பரிசோதனை செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

2). சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258–2023**

**Prosecution witness : அ.சா.5** **Date : 26.03.2024**

| | |
|---|---|
| **Name : இளங்கோ** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஒத்தபுளியன்குளத்தில் குடியிருந்து கல் தயாரிக்கும் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது மாமா செல்வராஜ் மற்றும் அவரது மகன் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்ற போது கந்த சாமி கோவில் அருகில் சென்ற போது விபத்து நடந்ததாக சொன்னார்கள். கடந்த 12.02.2023 ம் தேதியன்று காலை 8.50 மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள். பிறகு ஓமலூர் மருத்துவமனையில் வைத்து பிரேத பரிசோதனை செய்த நான் இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2). சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258-2023**

**Prosecution witness : அ.சா.6** **Date : 26.03.2024**

| | |
|---|---|
| **Name : கண்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஒத்தபுளியன்குளத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது பெரியப்பா மகன் செல்வராஜ் மற்றும் அவரது மகன் பழனியப்பன் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்ற போது கந்த சாமி கோவில் அருகில் சென்ற போது லாரி மோதி விபத்து நடந்ததாக சொன்னார்கள். கடந்த 12.02.2023ம் தேதியன்று காலை 8.50 மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள். பிறகு சடலத்தை ஓமலூர் மருத்துவமனையில் வைத்து பிரேத பரிசோதனை செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

2). சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258-2023**

**Prosecution witness : அ.சா.7** **Date : 26.03.2024**

| | |
|---|---|
| **Name : அல்லிமுத்து** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஒத்தபுளியன்குளத்தில் குடியிருந்து சாயப்பட்டரையில் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது சித்தப்பா மகன் செல்வராஜ் மற்றும் அவரது மகன் பழனியப்பன் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்ற போது கந்த சாமி கோவில் அருகில் சென்ற போது விபத்து நடந்ததாக சொன்னார்கள். கடந்த 12.02.2023 ம் தேதியன்று காலை 9.30 மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள். பிறகு சடலத்தை ஓமலூர் மருத்துவமனையில் வைத்து சடலத்தை பார்த்தேன். பிரேத பரிசோதனை செய்தபோது நான் இருந்தேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

2). சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 258-2023**

**Prosecution witness : அ.சா.8** **Date : 26.03.2024**

| | |
|---|---|
| **Name : மாதையன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஊத்தம்பள்ளில் குடியிருந்து ஹோட்டல் கடை வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது சித்தப்பா மகன் செல்வராஜ் மற்றும் அவரது மகன் பழனியப்பன் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்ற போது கந்த சாமி கோவில் அருகில் சென்ற போது லாரி மோதி விபத்து நடந்ததாக எனது கடையில் வேலை செய்பவர் சொன்னார். சொன்னார்கள். கடந்த 12.02.2023 ம் தேதியன்று காலை 8.50 மணிக்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள். பிறகு சடலத்தை ஓமலூர் மருத்துவமனையில் வைத்து சடலத்தை பார்த்தேன். பிரேத பரிசோதனை செய்தபோது நான் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

2). சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**